IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**MCOP.No.390/2022**

**நாள்– 28.02.2024**

**சிவசக்தி**

**ம.சா.1** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்தில் இறந்தவர் என்னுடைய கணவர் ஆவார். விபத்து சமயத்தில் என்னுடைய கணவர் லாரி ஓட்டுநராக இருந்து மாதம் 33ஆயிரம் சம்பாதித்தார் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.5 தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ம.சா.ஆ.5 இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.5 வழங்கிய நபர் நீதிமன்றத்தில் வந்து சாட்சியம் அளித்தால் தான் இந்த ஆவணத்தை ஏற்றுக்கொள்ள இயலும் என்றால் சரியல்ல. என்னுடைய கணவரின் உடன்பிறந்தவர்கள் 4 நபர்கள். என்னுடைய கணவர் 3வது நபர் ஆவார். என்னுடைய மாமனார், மாமியார் என்னுடன் வசிக்கிறார்கள் என்பதற்கு குடும்ப அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 4, 5 மனுதாரர்கள் என்னுடைய கணவரின் வருமானத்தை சார்ந்து இருக்கவில்லை என்றும், ஏனைய பிள்ளைகளின் வருமானத்தை சார்ந்து இருக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்து பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது. கேள்விப்பட்டேன். விபத்து சமயத்தில் என்னுடைய கணவர் லாரியை எந்த விதத்தில் ஓட்டிச் சென்றார் என்ற விபரம் எனக்கு தெரியாது. என்னுடைய கணவரும், லாரியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று எதிரே வந்த பேருந்தில் மோதி விபத்தை ஏற்படுத்தியதால் இந்த விபத்திற்கு என்னுடைய கணவருக்கும் சரி பங்கு உள்ளது என்றால் சரியல்ல. மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் என்னுடைய கணவர் ஓட்டிச் சென்ற லாரியின் உரிமையாளர் மற்றும் காப்பீடு கழகத்தையும் தரப்பினராக சேர்த்து இழப்பீடு கோரியிருக்கிறேன் என்றால் சரிதான். இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் மீது எந்த தவறும் இல்லாததால் இந்த 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு

கழகம் எவ்வித நஷ்ட ஈடும் வழங்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்பந்தப்பட்டகுற்ற வழக்கின் பார்வை மகஜர், மாதிரி வரைபடம், மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள், இறுதிஅறிக்கை போன்றவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த ஆவணங்கள் என்னுடைய வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதால் தான் அவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2024.02.28 17:22:08 +0530